செய்தி வெளியீடு எண் : 308 நாள் : 25.06.2014

பத்திரிக்கை செய்தி

ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளும், சட்டதிட்டங்களும்
பற்றிய தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி

-----------

சென்னை கிண்டியில் அமைந்துள்ள தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம், ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள், சட்டதிட்டங்கள் பற்றிய 3 நாள் பயிற்சியினை வரும் ஜுன் 27 முதல் ஜுன் 29 வரை நடத்தவுள்ளது.

உலகமயமாக்கலின் விளைவாக, ஏற்றுமதி வர்த்தகத்திற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இப்பயிற்சியில் சர்வதேச சந்தையில் விற்பனை வாய்ப்புக்கள், ஏற்றுமதி பொருளை பதப்படுத்துதல், சீரிய முறையில் பாக்கிங் செய்தல், இந்திய அரசின் ஏற்றுமதி-இறக்குமதி சட்டதிட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவணியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், பொருளை இறக்குமதி செய்பவரின் பின்னனி, இறக்குமதி-ஏற்றுமதி செய்யப்படும் நாட்டின் பொருளாதாரநிலை போன்ற தகவல்கள் பயிற்றுவிக்கப்படும். மேலும், இப்பயிற்சியில் நிதி உதவிகள் பற்றிய ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில், 18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலரும், குறிப்பாக ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்கள், சேரலாம். பதிவிற்கும், பயிற்சி கட்டணம் மற்றும் கூடுதல் விவரங்களுக்கும் அறிந்துக்கொள்ள 8754518644 / 8754514770 தொடர்புக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி நிறுவனத்தின் இணையதளம் www.editn.in பார்வையிடலாம்.

முதன்மை செயலர் / இயக்குநருக்காக

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை- 9.